<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

OS 30/2022

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 24 ஆம் நாள் வா.சா.6–ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. .ஜி.சுபத்திரா தேவி, எம்.எல்., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நடராஜன் | வயது | : | 77 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராமர் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | கடலூர் | | : | |

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சொத்துக்காக வழக்கு போட்டுள்ளார்கள். எனக்கு சொந்தமான நிலம் ராமாபுரத்தில் உள்ளது. நான் சொல்லும் சொத்து சமட்டிக்குப்பம் போகும் வழியில் உள்ளதா என்றால் இல்லை. 1 ஆம் பிரதிவாதி அர்ஜீனன் சொத்து கிரையம் வாங்கியது எனக்குத் தெரியாது. பிச்சம்மாள் போட்டுள்ள வழக்கு எந்த மாதிரியான வழக்கு என்று எனக்குத் தெரியாது. கண்ணுசாமி சொத்திலிருந்து தள்ளி இருந்த என் சொத்தினை நான் விற்றுவிட்டேனா என்றால் இல்லை. கண்ணுசாமிக்கு சொந்தமான சொத்து அவருக்கு பூர்வீக சொத்து என்றால் ஆமாம். கண்ணுசாமிக்கு பெயரில் தாண்டவராயன் பயிர் செய்தார். தற்போது வழக்கு சொத்து யாரிடம் உள்ளது என்று எனக்குத் தெரியாது. சமீப காலமாக நான் அந்த வழியாக செல்ல வேண்டிய அவசியம் இல்லாததால் நான் அந்த வழியாக போகவில்லை, அதனால் யார் பெயரில் தற்போது பயிர் செய்கிறார்கள் என்று எனக்கத் தெரியாது.

அர்சுனனை எனக்கு தெரியாது. கலியன் என்பவரை தெரியும். கலியன் தாண்டவராயன் வீட்டில் இருந்தார், அதனால் தெரியும். அர்சுனன் தாண்டவராயன் வீட்டில் இருந்தாரா என்றால் இருந்திருக்கலாம் எனக்கு அது பற்றி தெரியாது. தாண்டவராயன் மருமகனை எனக்கு தெரியும். அவர் மருத்துவராக பணி செய்கிறார். நான் அவ்வப்போது அவரிடம் சென்று வைத்தியம் பார்த்து கொள்வேனா என்றால் உடல் நிலை சரியில்லை என்றால் போவேன். எனக்கு வழக்கு சொத்து பற்றி எதுவும் தெரியாது என்பதும், நான் வாதியின் மருமகனிடம் வைத்தியம் பார்த்துக்கொள்வதால் பொய் சாட்சியம் அளிக்கிறேே என்பதும் சரியல்ல. தாண்டவராயன், பிச்சம்மாள் ஆகியோர்களிடம் அர்சுனன் குத்தகை விட்டதாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரம் எனக்குத் தெரியாது.